67—

கால்நடை மருந்தகம்

***674—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் வட்டம், கலியப்பேட்டை மற்றும் கம்மாளம்பூண்டி ஆகிய பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலியப்பேட்டை மற்றும் கம்மாளம்பூண்டி கிராமங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகக் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். அரசின் கொள்கைப்படி, ஒரு கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000—க்கும் மேல் இருந்தால் தான் முதலில் கால்நடை கிளை நிலையம் துவங்க முடியும். கால்நடை அலகுகள் 5,000—க்கும் மேல் இருந்தால்தான் அந்தக் கால்நடை கிளை நிலையம் கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கலியப்பேட்டை மற்றும் கம்மாளம்பூண்டி ஆகிய பகுதிகளில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க சாத்தியக்கூறு இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.*

திரு. க. சுந்தர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்மாளம்பூண்டி ஊராட்சியில் 2,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. அதைப்போலவே கலியப்பேட்டை ஊராட்சியிலும் 2,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. கம்மாளம்பூண்டியைச் சுற்றி 2 கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள பகுதிகளில் 10,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன.*

அதைப்போலவே, கலியப்பேட்டை பகுதியில் 8,000—க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. நீங்களும் ஆடு, மாடு, கோழிகளை வழங்குகிறீர்கள். அதனால் அந்தப் பகுதியில் கால்நடை மருத்துவர்களின் தேவை அதிகமாக இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கால்நடைக் கிளை நிலையங்களை இந்த ஆண்டே அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கலியப்பேட்டை மற்றும் சுற்றுப்புற கிராமங்களான ஒரக்காட்டுப்பேட்டை, ராசம்பேட்டை மற்றும் காவித்தண்டலத்தையும் சேர்த்து கால்நடை அலகுகள் 3,000—க்கும் குறைவாக, அதாவது, 1,530 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் துவங்கிட சாத்தியக்கூறுகள் இல்லையென்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கம்மாளம்பூண்டி மற்றும் அருகிலுள்ள கிராமங்களான நாஞ்சிபுரம், காரியம்பாளையம், காவனூர், புதுச்சேரி மற்றும் அகரம்துறையையும் சேர்த்து, 3,604 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகையால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கம்மாளம்பூண்டியில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க, அரசின் கொள்கை முடிவுகளுக்குட்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்கள்.

திரு. க. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கால்நடைகளின் எண்ணிக்கை, 2011 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட

கணக்கெடுப்பின் அடிப்படையிலானதாகும். இப்பொழுது அந்த எண்ணிக்கை கூடுதலாகியிருக்கின்றது.

அடுத்ததாக, உத்திரமேரூர் பேரூராட்சியில் 31–3–1964 அன்று, அன்றைக்கு உள் துறை அமைச்சராக இருந்த மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. கக்கன் அவர்களுடைய தலைமையில், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த பெரியவர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்களால் கட்டடத்துடன்கூடிய அரசினர் கால்நடை மருத்துவ சாலை ஒன்று திறந்து வைக்கப்பட்டது. ஆனால், 55 ஆண்டுகள் ஆனதால் அந்தக் கட்டடம் சேதமடைந்துள்ளது. அது கால்நடை மருந்தகமாகவே, dispensary ஆகவே தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. உத்திரமேரூர் ஊராட்சியாக இருந்தபொழுது, அது துவக்கப்பட்டது. இப்பொழுது, உத்திரமேரூர் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டு, 50,000 மக்கள் வசிக்கின்ற வகையில் ஒரு நகராட்சிப் பகுதியாக மாறியிருக்கிறது. எனவே, அந்த மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையாக இருக்கிறது.

இரண்டாவது, அந்த மருத்துவமனையில் மட்டுமல்ல; கலியாம்பூண்டி, நெய்யாடிவாக்கம் போன்ற பகுதிகளிலே உள்ள மருத்துவமனைகளிலும் கால்நடை மருத்துவர்கள் இல்லை. ஒப்பந்த அடிப்படையில்தான் அந்த மருத்துவர்கள் பணி செய்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் சுமார் 1,000 கால்நடை மருத்துவர்கள் ரூ.40,000/– சம்பளத்தில் ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஓராண்டு முடிந்தபிறகு, அவர்களுடைய நிலைமை என்ன? அந்த இடங்களிலே பணி செய்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதையும் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், உத்திரமேரூர் கால்நடை மருந்தகத்திலே Livestock Inspector, ஆய்வாளர் பணியிடம் நான்கு ஆண்டுகளாகக் காலியாக இருக்கிறது. எனவே, அந்த ஆய்வாளர் பணியிடத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிரப்பித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 9]

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூர் தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே, அந்தப் பகுதியில் 40,000 மாட்டினங்கள், 31,000 ஆட்டினங்கள் மற்றும் 75,000 கோழியினங்கள் உள்ளன. இவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனப்பெருக்கச் சேவைகளை வழங்கிட 20 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 கால்நடைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

அதேபோல, ஊராட்சியாக இருந்த உத்திரமேரூர் தற்போது பேரூராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாகவும், அங்குள்ள மருத்துவமனைக்குக் கட்டடம், பழைய கட்டடமாக இருக்கிற காரணத்தினால், கட்டட வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அது அரசினுடைய ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, வருகின்ற நிதியாண்டில் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்திலே தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10—50

அதேபோல, கால்நடை மருத்துவர்கள் நியமனத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். இன்றைக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலே மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு விதமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. கிராமப் பகுதியில் இருக்கின்ற, குறிப்பாக தாய்மார்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரம் பொருளாதார ரீதியில் உயர வேண்டும் என்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சி புரிகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இந்த ஆண்டு மட்டும், ஏறத்தாழ ஆறு இலட்சம் விலையில்லா வெள்ளாடுகளைக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதேபோல, ஊராட்சி, பேரூராட்சிகளில் உள்ள 2 இலட்சத்து 40 ஆயிரம் தாய்மார்களுக்கு தலா 25 கோழிக்குஞ்சுகள் வழங்குகின்ற திட்டத்தையும் கொடுத்துள்ளார்கள். அதேபோல, 12,000 மகளிருக்கு கால்நடை கறவைப் பசுக்கள் வழங்குகின்ற திட்டத்தையும் கொடுத்துள்ளார்கள். ஆகவே, கிராமப் பகுதிகளிலே,

பேரூராட்சிப் பகுதிகளிலே இருப்பவர்களுக்குத் தேவையான கால்நடைகள் அதிக அளவில் இருக்கின்ற காரணத்தினாலே, இன்றைக்கு கால்நடை மருத்துவர்களும் நமக்கு அதிக அளவில் தேவைப்படுகிறார்கள். தேவையின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு இன்றைக்கு ஏறத்தாழ 818 கால்நடை மருத்துவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டாலும்கூட, அவர்களை நிரந்தரம் செய்வதற்குண்டான பூர்வாங்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் முதலிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் எல்லாம் கால்நடை மருத்துவர்கள் தேவையோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் கால்நடை மருத்துவமனைகளையும், கால்நடை கிளை நிலையங்களையும் உடனடியாக ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

68—

ஆரம்ப சுகாதார நிலையம்

***3479—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், P. மேட்டுப்பாளையம் பேரூராட்சி, கவுண்டம்பாளையத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தியூர் தொகுதி, கோபிசெட்டிபாளையம் ஒன்றியம், P. மேட்டுப்பாளையம்